இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 313 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 10 – புதன்கிழமை 24 ஜூன் 2026 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 313 : Thiruvalluvar Year - 2057 - Aani 10 - Wednesday 24 June 2026 - Dak 12 Pages ₹ 5.00

## கேலிக்கூத்தான ஆட்சி நடைபெறுகிறது!

# பேரவையை ‘படப்பிடிப்புத் தளமாக’ மாற்ற முயற்சிக்கிறார் முதல்வர்!

## சட்டப்பேரவையில் வெளிநடப்புக்குப்பின் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சரமாரி குற்றச்சாட்டு!

**சென்னை, ஜூன் 24 -**

**“சட்டப்பேரவையை ‘படப்பிடிப்புத்தளமாக’ மாற்ற முயற்சிக்கிறார் முதல்வர்” என்று சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேரவையிலிருந்து தி.மு.கழக உறுப்பினர்கள் வெளிநடப்புக்குப் பின் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் சரமாரியாக குற்றஞ்சாட்டினார்.**

தமிழ்நாடு சட்டப்பேரவையில், ஆளுநர் உரை மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேசிய முதலமைச்சர், தி.மு.க மீது ஆதாரமற்ற அவதூறுகளை முன்வைத்ததைக் கண்டித்து தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தபிறகு, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஊடகங்களைச் சந்தித்து அளித்த பேட்டி வருமாறு :-

இன்று சட்டமன்றத்தில், முதலமைச்சர் அவர்கள் பதிலுரையைச் சரியாக 9.30 மணிக்கு ஆரம்பித்தார். அவர் பேசுவதையெல்லாம் நாங்கள் அமைதியாகக் கேட்டுக்கொண்டுதான் இருந்தோம். வழக்கம்போல், பிரச்சாரங்களில் பேசுவதுபோல, சினிமா பாணியில் தயார் செய்யப்பட்ட தன் டயலாக்குகளை எல்லாம் பேசிக்கொண்டு இருந்தார். அதன்பிறகு, சில தவறான, உண்மைக்கு மாறான தகவல்களை அவையில் பதிய வைக்கின்ற வேலையை ஆரம்பித்தார்.

உடனே நானும், எங்களின் சட்டமன்ற உறுப்பினர்களும் எழுந்து எங்களின் எதிர்ப்பைத் தெரிவித்தோம்.

### ஆதாரம் இல்லாமல், பேசக்கூடாது!

`பாயின்ட் ஆஃப் ஆர்டரில்’ எனக்குப் பேசுவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டேன். `பாயின்ட் ஆஃப் ஆர்டர்’ என்பதே, அவர் சொல்கின்ற விஷயம் தவறு, ஆதாரம் இல்லாமல், எதையும் பேசக்கூடாது என்று சொல்வதற்குதான் `பாயின்ட் ஆஃப் ஆர்டரே. ஆனால், சபாநாயகர் எங்களை அனுமதிக்கவில்லை.

நேற்று எதிர்க்கட்சித் தலைவராக நான் பேசும்போது, பல அமைச்சர்கள் குறுக்கிட்டுப் பேசினார்கள். முதலமைச்சரிடம் கேள்வி கேட்டால், அதற்கு



முதலமைச்சர் எந்தப் பதிலும் சொல்லவில்லை. ஆனால், பல அமைச்சர்கள் எழுந்து பல முறை குறுக்கிட்டுப் பேசினார்கள், சொன்னதையே திரும்பத் திரும்பப் பேசினார்கள்.

சபாநாயகர் `அவையின் நேரம் முடிந்துவிட்டது’ என்று கூறியதற்குப் பிறகு நாங்கள் அனைவரும் புறப்பட்டு வீட்டிற்குச் சென்றுவிட்டோம். அதற்குப் பிறகு இன்னொரு அமைச்சர் நான் பேசியதற்கு பதில் சொல்லிக் கொண்டிருந்தார். அவற்றையெல்லாம் நேற்று, நாங்கள் வீட்டிற்குச் சென்றுதான் தொலைக்காட்சி மூலமாகப் பார்த்தோம்.

இன்று முதலமைச்சர் உண்மைக்குப் புறம்பான ஒரு விஷயத்தைக் கூறும்பொழுது, என்ன ஆதாரத்தோடு பேசுகிறீர்கள் என்று கேட்டேன். அவர் எந்த ஆதாரமும் கொடுக்கவில்லை. ஆனால் சபாநாயகர், `முதலமைச்சர் பேச்சைத் தொடர்வார்’ என்று அனுமதித்தார்.

### ‘ஷூட்டிங் ஸ்பாட்’

முதலமைச்சர் இன்று ஒரு ‘ஸ்கிரிப்ட்’ எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார். அந்த உரையை அவர் பேசி முடிக்கும் வரை, நான் யாருக்கும் பதில் சொல்ல மாட்டேன் என்கிற தொனியில், யாரும் `கட்’ சொல்லக்கூடாது என்கிற மனநிலையிலேயே பேசினார். ஷூட்டிங் சென்றால் அவர் எப்படி இருப்பாரோ, அதே மாதிரி சட்டமன்றத்தை ஒரு ` ஷூட்டிங் ஸ்பாட்’டாக அவர் இன்று மாற்றிக் காட்டியிருக்கிறார்.

நேற்று நான் அவ்வளவு கேள்விகளைக் கேட்டேன், அப்போது ஒரு முறை கூட எழுந்து வாய் திறக்காத முதலமைச்சர், இன்று முழு டயலாக்கையும் மனப்பாடம் செய்து வந்து அதை முழுமையாகப் பேசியிருக்கிறார். தொடர்ந்து நீங்களும், ஊடகங்களும், செய்தியாளர்களும் அவரிடம் கேள்விகள் கேட்க எவ்வளவோ முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள், உங்களுக்கும் பதில் சொல்ல மறுக்கிறார், சட்டமன்றத்தில் எங்களுக்கும் பதில் சொல்ல மறுக்கிறார்.

ஒரு முதலமைச்சராக நாங்கள் அவரிடம் எதிர்பார்ப்பது, நாங்கள் கேட்கிற கேள்விகளுக்கு மக்களின் கேள்விகளைத்தான் நாங்கள் கேட்கிறோம் மக்களின் கேள்விகளுக்கு, ஒரு முதலமைச்சர் பொறுப்பாகப் பதில் அளிக்க வேண்டும். இதுதான் நாங்கள் எதிர்பார்ப்பது, மக்களும் அவரிடம் எதிர்பார்ப்பது. ஆனால், இவை எல்லாவற்றிற்கும் மேலாக, என்ன நடந்தாலும் அதை தி.மு.க. மீது பழி போடுவதையே இந்த அரசு ஒரு வழக்கமாகக் கொண்டிருக்கிறது.

அதனால்தான், ஊடகங்கள் மூலமாக நான் முதலமைச்சரைக் கேட்டுக் கொள்வது, நேற்று நான் பல கேள்விகளை வைத்திருந்தேன், சிலவற்றை மட்டும் இங்கே மீண்டும் கேட்க விரும்புகிறேன்.

### மரபு மீறல்

ஆளுநர் சட்டசபைக்கு வரும்போது, மரபு மீறப்பட்டு இருக்கிறது. ஆளுநர் சட்டசபைக்கு வரும்போது, ஆரம்பத்தில் `தமிழ்த்தாய் வாழ்த்தும்’, இறுதியாக நிகழ்ச்சி முடியும் போது `தேசிய கீதமும்’ பாடப்படுவதுதான் வழக்கம். ஆனால், இந்த முறை ஆளுநர் வரும்போது மரபு மீறப்பட்டு, இரண்டு முறை ஏன் `தேசிய கீதம்’ பாடப்பட்டது? என்று கேள்வி கேட்டேன், இதில் என்ன தவறு என்று என்னிடம் கேட்டார்கள்.

நான் சொன்னேன், தவறு கிடையாது, `தமிழ்த்தாய் வாழ்த்து’ முதலில் பாடிவிட்டீர்கள். ஆனால், `தேசிய கீதம்’ இரண்டு முறை பாடப்பட்டது தவறு; தமிழ்த்தாய் வாழ்த்தை இரண்டு முறையோ மூன்று முறையோ நீங்கள் ஒலிக்க வைக்க வேண்டியதுதானே? என்று நான் கேள்வி கேட்டேன், அதற்குப் பதில் சொல்லவேண்டும், இதற்கு என்னவிதமான காம்ப்ரமைஸ் அடைந்திருக்கிறீர்கள் நீங்களும் ஆளுநரும் என்று கேள்வி கேட்டேன், அதற்கு எந்தவிதமான ஒரு பதிலும் இல்லை.

அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், கலைஞருடைய படத் திறப்பிற்கு குடியரசுத் தலைவர் (பிரசிடென்ட்) வந்தபோது அப்பொழுது நீங்கள் பாடினீர்கள் என்றார். முதலமைச்சருக்கு இந்த நெறிமுறை (புரட்டோகால்) கூடத் தெரியாமல் இருப்பது மிகவும் வருத்தத்திற்குரிய ஒரு விஷயம். குடியரசுத் தலைவர் வரும் போது குடியரசுத் தலைவருக்கு என்று ஒரு நெறிமுறை இருக்கிறது, ஆனால் ஆளுநருக்கு அப்படியெல்லாம் கிடையாது,

> ### நெறிமுறை கூட தெரியாத முதல்வர்!
>
> **அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், கலைஞருடைய படத்திறப்பிற்கு குடியரசுத் தலைவர் (பிரசிடென்ட்) வந்தபோது அப்பொழுது நீங்கள் பாடினீர்கள் என்றார். முதலமைச்சருக்கு இந்த நெறிமுறை (புரட்டோகால்) கூடத் தெரியாமல் இருப்பது மிகவும் வருத்தத்திற்குரிய ஒரு விஷயம். குடியரசுத் தலைவர் வரும் போது குடியரசுத் தலைவருக்கு என்று ஒரு நெறிமுறை இருக்கிறது, ஆனால் ஆளுநருக்கு அப்படியெல்லாம் கிடையாது.**

அதே மாதிரி `நான் முதல்வன்’ திட்டம், கிட்டத்தட்ட 41 லட்சம் மாணவர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள், பல சாதனைகள் செய்திருக்கிறார்கள், அந்தத் திட்டத்தை ஏன் முடக்கி இருக்கிறீர்கள்? என்று நான் கேட்ட கேள்விக்கு, கண்டபடி இஷ்டத்திற்கு ஓர் ஆதாரமும் இல்லாமல், முறையான பதில் இல்லாமல் என்னென்னவோ குற்றச்சாட்டுகளை எல்லாம் வைக்கிறார்.

மின்வெட்டு தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு எல்லாம் மீண்டும் அவகாசம் கேட்கிறார்கள். அதையும் தூக்கி தி.மு.க. மீது பழியைப் போட்டுவிட்டு `ஃபியூஸ் கேரியரைப் பிடுங்கிக் கொண்டு போய்விட்டார்கள்’ என்கிறார்கள், எந்தவிதமான கேள்விக்கும் ஒரு தெளிவான பதில் இல்லை.

### விவசாயிகளை கொச்சைப்படுத்துகிறார்!

`பயிர்க் கடன் தள்ளுபடி’, `விவசாயப் போராட்டம்’ இதைப் பற்றிக் கேட்டதற்கு, `விவசாயிகளை எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் தூண்டிவிட்டுப் போராட்டத்தில் ஈடுபடச் சொல்கிறார்கள்’ என்று விவசாயிகளுடைய போராட்டத்தை முழுமையாகக் கொச்சைப்படுத்தியிருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். இன்றுகூட காலையில் தொலைக்காட்சியில் பார்த்தேன், திருவள்ளூரில் விவசாயிகள் போராட்டம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த விவசாயிகள் போராட்டத்தை, தி.மு.க. தான் தூண்டிவிடுகிறது என்று விவசாயிகளை நம் முதலமைச்சர் அவர்கள் மிகவும் கேவலமாக, கொச்சைப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

அதே மாதிரி, சட்டம் ஒழுங்குப் பிரச்சினை, மீண்டும் அதற்கும் அதே பதில்தான், `எனக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுங்கள்’ என்று கூறுகிறார். ஏன் டி.ஜி.பி.யை நீங்கள் நியமிக்கவில்லை என்று கேட்கிறார். சரி, நாங்கள் செய்யவில்லை, அதான் மக்கள் உங்களைத் தேர்ந்தெடுத்துவிட்டார்களே, மாற்றம் என்று சொன்னீர்களே, ஒரே நாளில் எல்லாவற்றையும் கிழித்து எறிந்துவிடுவேன் என்று சொன்னீர்களே, ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடமே எல்லாம் மாற்றுவேன் என்று சொன்னீர்களே, இப்போது இந்த 40 நாட்களில் உங்களுடைய காவல்துறை எதை கிழித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதுதான் நாங்கள் கேட்கக்கூடிய கேள்வி.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

---

## ‘குட்டிக்கதை’ என்று முதல்வர் உளறியிருக்கிறார்! செங்கல்பட்டு நீதிமன்றத்தில்

# ‘கணவனை தேடும் மனைவி’ கதையெல்லாம் நாட்டுக்கே தெரியும்!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பதிலடி!

**சென்னை, ஜூன் 24 -**

**சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில், “குட்டிக்கதை என்று முதல்வர் உளறியிருக்கிறார்” என்றும், “செங்கல்பட்டு நீதிமன்றத்தில் ‘கணவனை தேடும் மனைவி’ கதையெல்லாம் தமிழ்நாட்டு மக்களுக்கே தெரியும்” என்றும் பதிவிட்டுள்ளார்.**

எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூகவலைத்தளப்பதிவில் கூறியிருப்பதாவது:-

சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு பதிலுரை என்ற பெயரில் Scripted அவதூறுகளை அள்ளி வீசி Acting Performance காட்டி இருக்கிறார் முதலமைச்சர் விஜய். பேரவையின் live Cameraவை, சினிமா camera என்று நினைத்துக் கொண்டு விஜய் பேச, அதனை எதிர்க்கட்சிகளின் குறுக்கீடுகள் இன்றி Single Takeஇல் Shoot செய்ய வேண்டும் என்று பேரவைத்தலைவர் மெனக்கெட்டது ஏற்புடையது அல்ல.

முதலமைச்சரின் பதிலுரையில் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளும், பஞ்ச் டயலாக்கும் மட்டும் தான் இருந்ததே தவிர, மின்வெட்டு, விவசாயிகள் பிரச்சினை, மோசமாகி இருக்கும் சட்டம் ஒழுங்கு மற்றும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான திட்டங்கள் பற்றி எந்த பதிலும் இல்லை.

எதிர்க்கட்சிகள் தூண்டுதலில் விவசாயிகள் போராடுவதாக விவசாயிகளை முதலமைச்சர் விஜய் கொச்சை செய்ததுக் கண்டிக்கத்தக்கது என்று எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

குட்டிக்கதை சொல்கிறேன் என்ற விஜயின் உளறல் அவை மாண்புக்கு முற்றிலும் எதிரானது. செங்கல்பட்டு கோர்ட்டில் கணவனை தேடும் மனைவி கதை எல்லாம் தமிழ்நாட்டுக்கே தெரியும். ஆகவே, நடிகர் என்பதை மறந்து, இனியாவது முதலமைச்சராக நடந்து கொள்ள வேண்டும் என்று தமது சமூக வலைதளப் பதிவில் விஜய்க்கு எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

---

## பயிர்க்கடன் தள்ளுபடிக்கு புதிய கட்டுப்பாடு!

### அரசின் உத்தரவால் விவசாயிகள் கலக்கம்!

சென்னை, ஜூன் 24 –

கூட்டுறவு சங்கங்களில் தலைவர் மற்றும் இயக்குநர்களாக பதவி வகித்த விவசாயிகளுக்கு பயிர்க்கடன் தள்ளுபடி கிடையாது என த.வெ.க. அரசு புதிய கட்டுப்பாட்டை விவசாயிகள் தலையில் அடுத்த பேரிடியாக இறக்கி உள்ளது. இது விவசாயிகள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. உறுப்பினர்களாக இருக்கும் விவசாயிகள் மட்டுமே பயிர்க்கடன் பெற தகுதியுள்ள நிலையில் அரசின் இந்த அறிவிப்பு தண்டனையா? என விவசாயிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலுக்கு முன்பாக த.வெ.க. தலைவர் விஜய், விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களில் பெற்ற பயிர்க்கடன் முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும் என அறிவித்தார்.

ஆனால் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு ரூ.50 ஆயிரத்துக்கு உட்பட்ட கடன்கள் மட்டுமே தள்ளுபடி செய்யப்படும் எனவும், ரூ.5,932 கோடியே 23 லட்சம் மதிப்பிலான கடன்களை மட்டுமே தள்ளுபடி செய்வதாகவும் அறிவிப்பு வெளியிடப்பட்டது. சிறு, குறு விவசாயிகளுக்கு முரண்பாடான கடன் தள்ளுபடி அறிவிப்பை வெளியிட்டார்.

இந்நிலையில் கடன் தள்ளுபடி தொடர்பாக கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் லதா, அனைத்து மாவட்ட மண்டல இணைப்பதிவாளர்கள், அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகளின் மேலாண்மை இயக்குநர்கள், தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் ஆகியோருக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், தள்ளுபடிக்கு தகுதி வாய்ந்த கடன் பட்டியல் கூட்டுறவு சங்கங்களின் செயலர், பணியாளரால் தயாரிக்கப்படும் போது, அனைத்து வகையான கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் அவர் தம் குடும்பத்தினர் பெற்ற பயிர் கடன்கள் மற்றும் அனைத்து வகையான கூட்டுறவு நிறுவனங்க ளின் முன்னாள் நிர்வாகக் குழுவினர் அவர் தம் குடும்பத்தினர் பெற்ற பயிர்க்கடன்கள் இடம் பெறக் கூடாது என தெரிவித்துள்ளார். இந்த அறிவிப்பு விவசாயிகள் மத்தியில் மேலும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.